

செஞ்சியில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.அவசர செயற்குழு கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா , மாவட்ட பொருளாளர் ரமணன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார் அருணகிரி, அமுதா ரவிக்குமார், செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் மத்திய ஒன்றியம் நன்னாடு ஊராட்சியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

### கழக துணைப் பொதுச் செயலாளர் இ.பெரியசாமி தலைமையில்

# திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டத்தில் கலைஞர் பிறந்த நாள் விழா!

## அர.சக்கரபாணி – இ.பெ.செந்தில்குமார் – வீரா.எஸ்.டி.சாமிநாதன் முன்னிலை!

திண்டுக்கல்,மே.31-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பொறுப்பையேற்று அரை நூற்றாண்டு காலம் சிறப்பாக செயல்பட்டடு, தமிழக முதலமைச்சராக 19 ஆண்டுகள் பொறுப்பு வகித்து நவீன தமிழகத்தை உருவாக்க அடித்தளம் அமைத்து வளர்த்தெடுத்த நவீன தமிழகத்தின் சிற்பி முன்னாள் முதலமைச்சர், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவினை மிகச் சிறப்பாக கொண்டாடும் வகையில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டுக்கல், கலைஞர் மாளிகையில் 03.06.2026, புதன்கிழமை காலை 9.00 மணியளவில் கழக துணை பொதுச் செயலாளரும் முன்னாள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி தலைமையிலும் முன்னாள் உணவுத் துறை அமைச்சரும், திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் அர.சக்கரபாணி,

திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினரும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளருமான ஐ.பி. செந்தில்குமார் மற்றும் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினரும் வேடசந்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளருமான வீரா. எஸ்.டி.சாமிநாதன் ஆகியோர்களின் முன்னிலையிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை மற்றும் வார்டு நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாநகர மேயர், துணை மேயர், மண்டலத் தலைவர்கள் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், நகர்மன்ற, பேரூராட்சி மன்ற தலைவர், துணைத்தலைவர் உள்ளிட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற முன்னாள் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திலுள்ள அனைத்து மாநகர, நகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்களில் உள்ள அனைத்து கிளைகள் மற்றும் வார்டுகள் தோறும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் வைத்து மரியாதை செலுத்தியும், ஒலி மற்றும் ஒளி பெருக்கி அமைத்து கழக கொடியேற்றியும், இனிப்புகள் வழங்கியும் ஏழை எளியவர்களுக்கும், முதியோர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும்,

இரத்ததான முகாம், மருத்துவ முகாம் ஆகியவை நடத்தியும் கொண்டாடும் வகையில் சிறப்பாக ஏற்பாடு செய்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவினை மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என மாவட்டச் செயலாளர்கள் அர.சக்கரபாணி, இ.பெ. செந்தில் குமார் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103ஆவது பிறந்தநாள் விழா! ஜூன்-3 அன்று

# இராணிப்பேட்டை மாவட்டத்தில் ஊர் கிளை, உட்கிளை தோறும் சிறப்பாகக் கொண்டாடிடுவோம்!

## மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி வேண்டுகோள்!

இராணிபேட்டை,மே.31-

இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தங்கச் சூரியன் உதிக்கும் வங்க கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் எங்கள் அன்பு கலைஞரே,

“என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே” எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான எங்கள் முத்தமிழ் அறிஞரே,

பெரியாரின் எண்ணங்களை அண்ணாவின் வழியில் நடைமுறை படுத்தி பல லட்சியங்களை சாதித்த பேரறிஞரின் தம்பியே,

சட்டங்கள் பல இயற்றி, திட்டங்கள் பல தீட்டி தமிழ்நாட்டை உலகறிய செய்த எங்கள் அன்பு இதயமே,

அய்யன் வள்ளுவருக்கு தேர் வைத்தால் போதாது என்று வானுயர சிலை வைத்து உலகத்தையே அண்ணார்ந்து பார்க்க வைத்த திருக்குறளுக்கு உரை எழுதிய தங்க பேனாவே,

உங்கள் பிறந்த நாளில் நின்னை வணங்குகின்றோம்!!!

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், சமூக நீதி கொள்கைக்கும், மிகப் பெரிய பங்காற்றிய தலைவர். பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்கிய சட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், சமத்துவபுரம் திட்டம், உழவர் சந்தை, தமிழ் மொழிக்கான செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்தது, மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஏழை மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் உள்ளிட்ட எண்ணற்ற சாதனைகளை தமிழகத்திற்கு வழங்கியவர் கலைஞர்.

எனவே அவரது பிறந்த நாள் விழாவை மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட கழகத்தின் அனைத்து அணியினர், உள்ளாட்சி பிரதிநிதிகள் அவரவர் பகுதியில் பங்கேற்று இருவண்ணக் கழக கொடி உயர்த்தி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு, நலத்திட்டங்கள் வழங்கி மற்றும் மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகம், எழுது பொருட்கள் வழங்கி கண்தானம், இரத்த தானம், அன்னதானம் ஆகிய நிகழ்ச்சிகளை சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், வட்ட கிளை, உட்கிளை, ஊர் கிளை செயலாளர்கள் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### முத்தமிழறிஞர் - செம்மொழி நாயகர் - கலைஞர் பிறந்தநாள் விழா!

# திருப்பூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!

திருப்பூர், மே. 31–

முத்தமிழ் அறிஞர் செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களது பிறந்தநாள் விழா ஜூன் 3 ம் தேதி திருப்பூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் அறிக்கை விடுத்துள்ளார்.

அறிக்கை வருமாறு :



தங்கச் சூரியன் உதிக்கும் வங்க கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் எங்கள் அன்பு கலைஞரே, ”என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான எங்கள் முத்தமிழ் அறிஞரே, பெரியாரின் எண்ணங்களை அண்ணாவின் வழியில் நடைமுறை படுத்தி பல லட்சியங்களை சாதித்த பேரறிஞரின் தம்பியே, சட்டங்கள் பல இயற்றி, திட்டங்கள் பல தீட்டி தமிழ்நாட்டை உலகறிய செய்த எங்கள் அன்பு இதயமே, இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர், இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளர், உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் ‘தமிழினத் தலைவர்’ கலைஞர்,

அய்யன் திருவள்ளுவருக்கு தேர் வைத்தால் போதாது என்று வானுயர சிலை வைத்து உலகத்தையே அண்ணார்ந்து பார்க்க வைத்த திருக்குறளுக்கு உரை எழுதிய தங்க பேனாவே உங்கள் பிறந்த நாளில் வணங்குகின்றோம்.

திருப்பூர் கிழக்கு மாவட்டத்தில் ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாடிடும் வகையில் திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, வார்டு கழக, கிளைக் கழகங்கள் தோறும் கலைஞரின் திருவுருவச் சிலைக்கும், சிலை இல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி கழக கொடி ஏற்றி, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள், எழுது பொருட்கள் வழங்கியும், முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், பார்வையற்றோர் இல்லங்கள், மாணவர் விடுதிகள், கருணை இல்லங்கள், பெண்கள் காப்பகங்கள், மனநல காப்பகம், பார்வையற்றோர் இல்லம் போன்ற இடங்களில் காலை, மதியம், இரவு உணவுகள் வழங்கியும், நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, புத்தாடை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், இலவச கண் மருத்துவ சிகிச்சை முகாம், இரத்த தான முகாம்கள் சிறப்பாக நடத்தி வேண்டுமாய் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுசமயம், நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி இந்நாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், BLA 2, BLC பாக முகவர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் அவர்கள் சார்ந்த பகுதிகளில் தவறாமல் கலந்து கொண்டு செம்மொழி நாயகர் கலைஞரின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் -

# முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## மதுரை மாநகர் மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி வேண்டுகோள்!

மதுரை, மே 31-

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் கோ.தளபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



நவீன தமிழ்நாட்டின் சிற்பி - ஓய்வில்லாமல் உழைத்த உழைப்பாளி சாமானிய அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்கள் கொண்டுவந்து நாடே போற்றுகின்ற ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜூன் - 3 புதன்கிழமை அன்று காலை 8 மணிக்கு சிம்மக்கல் ரவுண்டானா - வடக்கு வெளி வீதியில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன். பிறந்த நாள் விழாவை சிறப்பான முறையில் கொண்டாடும் வகையில் பகுதி கழக, வட்ட கழக, தோறும் நமது இரு வண்ண கொடிகள் ஏற்றி ஒலி பெருக்கி அமைத்து, படத்திற்கு மாலை அணிவித்து, மரகன்றுகள் நட்டும், இனிப்புகள் வழங்கியும், மாபெரும் அன்னதானங்கள் வழங்கியும், முதியோர் இல்லங்கள் காப்பகங்களில் அறுசுவை உணவு வழங்கியும், ஏழை எளிய சாமானியர்கள் பயன்படுகின்ற வகையில் நலத்திட்டங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு : காலை 7.30 மணி அளவில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை முன்பு 1000 பேருக்கு அன்னதானம் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் பகுதி பகுதியாகச் சென்று வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.உடன் மேயர்.கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு,பொதுக்குழு உறுப்பினர் நடராஜன் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி விஜயலட்சுமி பழனிசாமி
### மே 31 (2004)



**திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள் கிளைக் கழகச் செயலாளராக நீண்ட நாட்கள் பணியாற்றியவர்.**

**பின்னர், 1991ஆம் ஆண்டு சுல்தான்பேட்டை ஒன்றியக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.**

**2000ஆம் ஆண்டு கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய இவர், கோவை மாவட்டக் கழகச் செயலாளர் பொங்கலூர் நா.பழனிசாமி அவர்களின் துணைவியாராவார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**